தமிழ்நாடு பள்ளிக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள், சென்னை–600 006.

ந.க.எண். 34784/எம்1/இ1/2025 நாள்: 17.07.2025

பொருள் : பள்ளிக் கல்வி – 2025–26 மன்றச் செயல்பாடுகள் – அரசு பள்ளியில் பயிலும் 6 முதல் 9 ஆம் வகுப்பு மாணவர்களுக்கான பள்ளியளவிலான இலக்கிய மன்றப் போட்டிகள் மற்றும் வினாடிவினா மன்றப் போட்டிகள் – வழிகாட்டும் நெறிமுறைகள் வழங்குதல் – சார்ந்து.

பார்வை :

1. தமிழ்நாடு பள்ளிக் கல்வி இயக்குநரின் செயல்முறை ந.க.எண்.034785/ எம்/இ1/2025 நாள்: 30.06.2025
2. தமிழ்நாடு பள்ளிக் கல்வி இயக்குநரின் செயல்முறை ந.க.எண்.32841/ எம்1/இ1/2025 நாள்: 02.07.2025

-----

பார்வை 1 & 2 – இல் காணும் செயல்முறைகளின்படி, அனைத்து அரசு நடுநிலை, உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் 6 முதல் 9 ஆம் வகுப்பு வரையிலான மாணவர்களுக்கான மன்றச் செயல்பாடுகளை மகிழ்முற்றம் மாணவர் குழுக்கள் வாயிலாக ஒவ்வொரு மாதமும் நடைமுறைப்படுத்துதல் சார்ந்து வழிகாட்டு நெறிமுறைகள் வழங்கப்பட்டுள்ளது.

அதனை தொடர்ந்து 2025 –26 ஆம் ஆண்டிற்கான இலக்கிய மன்றம் மற்றும் வினாடி வினா மன்றங்களுக்கான பள்ளி அளவிலான போட்டிகளை பின்வருமாறு நடத்திட திட்டமிடப்பட்டுள்ளது.

| பிரிவு | வகுப்பு | இலக்கிய மன்ற போட்டிகளின் எண்ணிக்கை | வினாடி வினா மன்ற போட்டிகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| பிரிவு I | வகுப்பு 6 & 7 | 8 | 1 |
| பிரிவு II | வகுப்பு 8 | 8 | 1 |
| பிரிவு III | வகுப்பு 9 | 8 | 1 |

மேலே அட்டவணையில் குறிப்பிட்டுள்ளவாறு, பள்ளி அளவிலான போட்டிகள் நடைபெறுவதை சார்ந்த மன்றப் பொறுப்பாசிரியர்கள் உறுதி செய்தல் வேண்டும். பள்ளி அளவிலான இலக்கிய மன்றம் மற்றும் வினாடி வினா மன்ற போட்டிகளை 21.07.25 முதல் 31.07.25 வரை திட்டமிட்டு நடத்திடல் வேண்டும். போட்டிக்கான தலைப்புகள், போட்டிக்கான மதிப்பீட்டு படிவம் மற்றும் EMIS தளத்தில் பங்கேற்பாளர்கள் & வெற்றியாளர்களின் விவரங்களை உள்ளீடு செய்வதற்கான வழிமுறைகள் ஆகியவை தனித்தனியே இணைப்புகளாக வழங்கப்பட்டுள்ளது.

ஒவ்வொரு பிரிவிலும் உள்ள போட்டிகளில் பங்கேற்கும் மாணவர்களின் பெயர்ப்பட்டியல் பெறப்பட்டு அவை முறையாக EMIS தளத்தில் பதிவேற்றம் செய்யப்படுதல் வேண்டும். பின்னர், ஒவ்வொரு பிரிவிற்குமான போட்டிகளை திட்டமிட்டு நடத்தி அன்றைய தினமே வெற்றியாளர்களை அறிவித்திடல் வேண்டும். மேலும், பங்கேற்பாளர்கள் மற்றும் வெற்றியாளர்களின் விவரங்கள் 31.07.2025 –குள் EMIS தளத்தில் பதிவேற்றம் செய்யப்படுதல் வேண்டும்.

பள்ளி அளவிலான போட்டிகளை குறிப்பிடப்பட்டுள்ள காலவரையறைக்குள் திட்டமிட்டு நடத்தி முடித்து EMIS தளத்தில் பதிவேற்றம் செய்வதற்கான அனைத்து முயற்சிகளையும் சார்ந்த பள்ளித் தலைமையாசிரியர் மேற்கொள்ள வேண்டும்

6 முதல் 9 ஆம் வகுப்பு வரை உள்ள அனைத்து மாணவர்களையும் இலக்கிய மன்றம் மற்றும் வினாடி வினா மன்ற போட்டிகளில் அவரவர் பிரிவில் பங்கேற்க சார்ந்த மன்றப் பொறுப்பாசிரியர்கள் மாணவர்களை ஊக்குவித்தல் வேண்டும். பள்ளி அளவில் அவரவர் பிரிவில் நடைபெறும் ஏதேனும் ஒரு போட்டியிலாவது ஒவ்வொரு மாணவரையும் பங்கேற்க செய்தல் வேண்டும் . இவ்வாறு பள்ளி அளவில் நடைபெற உள்ள இலக்கிய மன்ற மற்றும் வினாடி வினா மன்றப் போட்டிகளை மேற்குறிப்பிட்ட வழிகாட்டுதல்களை பின்பற்றி திட்டமிட்டு நடத்திட நடுநிலை , உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர்களுக்கு அறிவுரை வழங்கிடுமாறு அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்களும் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

போட்டிகள் நடைபெறுவதற்கு முன்னதாக மாவட்டக் கல்வி அலுவலர்கள், உதவித் திட்ட அலுவலர், வட்டாரக் கல்வி அலுவலர்கள், மாவட்டப் பள்ளித் துணை ஆய்வாளர், மாவட்ட ஒருங்கிணைப்பாளர் மற்றும் அனைத்து ஆசிரியர் பயிற்றுநர்கள் ஆகியோர்க்கு செயல்முறையில் குறிப்பிடப்பட்டுள்ள வழிகாட்டு நெறிமுறைகளை முதன்மைக் கல்வி அலுவலர் தலைமையில் கூட்டம் நடத்தி எடுத்துரைக்கப்படுதல் வேண்டும்.

இதனை தொடர்ந்து, வட்டாரக் கல்வி அலுவலர்கள் மற்றும் வட்டார வளமைய மேற்பார்வையாளர் இணைந்து அனைத்து நடுநிலை, உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர்களுக்கு வட்டார அளவிலான கூட்டத்தினை நடத்தி உரிய வழிகாட்டுதல்களை வழங்கி அவர்களை குறிப்பிட்ட காலவரம்பிற்குள் பள்ளி அளவிலான போட்டிகளை திட்டமிட்டு நடத்தி முடித்திட எடுத்துரைத்தல் வேண்டும்.

மேலும், பள்ளி அளவிலான போட்டிகள் நடைபெறும் போது மாவட்ட மற்றும் வட்டார அளவிலான அனைத்து அலுவலர்களும் பள்ளி பார்வை மேற்கொள்ள அறிவுறுத்துமாறு அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்களும் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

இணைப்புகள் :

1. பள்ளி அளவிலான இலக்கிய மன்றப் போட்டிக்கான தலைப்புகள்
2. இலக்கிய மன்றப் போட்டிக்கான நடுவர்களுக்கான மதிப்பீட்டு படிவம்
3. இலக்கிய மன்றப் போட்டிக்கான மூன்று நடுவர்களின் மதிப்பெண்களை தொகுக்கும் தொகுப்பு மதிப்பீட்டு படிவம் (consolidated scoring sheet)
4. பள்ளி அளவிலான வினாடி வினா மன்றப் போட்டி நடத்துவதற்கான வழிமுறைகள்
5. வினாடி வினா மன்றப் போட்டிக்கான நடுவர் மதிப்பீட்டு படிவம்
6. EMIS தளத்தில் பங்கேற்பாளர்கள் & வெற்றியாளர்களின் விவரங்களை உள்ளீடு செய்வதற்கான வழிமுறைகள்

17/7/2025

பள்ளிக் கல்வி இயக்குநர்

17.7.25

பெறுநர்

முதன்மைக் கல்வி அலுவலர், அனைத்து மாவட்டங்கள்

நகல்

1. அரசு முதன்மைச் செயலர் அவர்கள், பள்ளிக் கல்வித் துறை, தகவலுக்காக பணிந்து அனுப்பப்படுகிறது.
2. மாநில திட்ட இயக்குநர், ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி, சென்னை-600006.
3. இயக்குநர், தொடக்கக் கல்வி இயக்குநரகம், சென்னை-600006
4. உறுப்பினர் செயலர், மாதிரிப் பள்ளிகள், சென்னை - 600006

**இணைப்பு - I - பள்ளிஅளவிலான இலக்கிய மன்ற  போட்டிக்கான தலைப்புகள்**

| பள்ளி அளவிலான - தமிழ் இலக்கிய மன்றப் போட்டிகள் 2025-26 | | | | | |
|---|---|---|---|---|---|
| **மையக் கருத்துக்கள் - சமத்துவம், அமைதி மற்றும் நம்பிக்கை** | | | | | |
| **போட்டிகள்** | **பிரிவு I (வகுப்பு 6 மற்றும் 7)** | **பிரிவு II (வகுப்பு 8)** | **பிரிவு III (வகுப்பு 9)** | **மதிப்பெண்களை வழங்கும் அளவுகோல்கள்** | **வெற்றியாளர்களின் எண்ணிக்கை** |
| 1.கட்டுரை எழுதுதல் ( கால அளவு 60 நிமிடம்) | 1. வேற்றுமையில் ஒற்றுமை<br>2. நட்பை கொண்டாடுவோம் நம்பிக்கையை போற்றுவோம்<br>3. அமைதிக்கு பாதை அமைப்போம். | 1.நாட்டின் முன்னேற்றம் பாலின சமத்துவமே<br>2. சமூக உறவை ஒற்றுமையாக வளர்ப்போம்<br>3. நாட்டின் விடுதலையில் அமைதியின் பங்கு | 1. நிலையான வளர்ச்சி மற்றும் நாட்டின் அமைதி<br>2. இந்திய வரலாற்றில் அகிம்சை வழி<br>3. அறம் வளர்க்கும் சமத்துவம். | கட்டுரை எழுதுதல் – மொத்த மதிப்பெண்கள் 20<br>1.கருத்து - 6 மதிப்பெண் (கருத்து தொடர்பு, புரிதல் தெளிவான கருத்தோட்டம் )<br>2.மொழி நடை - 5 மதிப்பெண் (சொல் பயன்பாடு, இலக்கணம், எழுத்து பிழையின்மை)<br>3.ஆக்கத்திறன் மற்றும் பகுப்பாய்வு  திறன் –5 மதிப்பெண்கள் (உதாரணங்களுக்கான ஆக்கத்திறன், வாழ்க்கை தொடர்பு, புதுமை கண்ணோட்டம்)<br>4.கருத்தோட்டம் –4 மதிபெண்கள் (கையெழுத்து, காலவரையறை தெளிவு) | 3 (ஒவ்வொரு பிரிவிலும் ஒரு வெற்றியாளர்) |

| பள்ளி அளவிலான - தமிழ் இலக்கிய மன்றப் போட்டிகள் 2025-26 | | | | | |
|---|---|---|---|---|---|
| மையக் கருத்துக்கள் - சமத்துவம், அமைதி மற்றும் நம்பிக்கை | | | | | |
| **போட்டிகள்** | **பிரிவு I (வகுப்பு 6 மற்றும் 7)** | **பிரிவு II (வகுப்பு 8)** | **பிரிவு III (வகுப்பு 9)** | **மதிப்பெண்களை வழங்கும் அளவுகோல்கள்** | **வெற்றியாளர்களின் எண்ணிக்கை** |
| 2. கதை கூறுதல் (கால அளவு 3 நிமிடம் ) | 1. நண்பர்களுக்கு ஏற்படும் சிக்கலில் எவ்வாறு உதவினர்கள் என்பதை சுவைப்பட கூறுங்கள்.<br>2.நீங்கள் ஒரு விளையாட்டு போட்டியின் தலைவன் என்று கற்பனை செய்யுங்கள். எல்லா மாணவர்களும் விளையாட்டுகளில் சமமாக பங்கேற்பது எப்படி உறுதிப்படுத்துவீர்கள் என்பது பற்றிய ஒரு கதையைச் சொல்லுங்கள்.<br>3. உங்கள் நண்பர் நீண்ட காலமாக பள்ளிக்கு வரவில்லை என்று கற்பனை செய்து கொள்ளுங்கள் அவர் பள்ளிக்கு வர என்ன அறிவுரை வழங்குவீர்கள் என்பதை ஒரு கதையாக சொல்லுங்கள் | 1. உங்களுக்கும் உங்கள் ஆசிரியருக்கும் இடையே உள்ள புரிதல் குறித்து ஒரு கதையைச் சொல்லுங்கள்.<br>2. உங்கள் நண்பருக்கு படிப்பதில் சிரமம் இருந்தால் நம்பிக்கையுடன் சமாளிக்க நீங்கள் அவர்களுக்கு எவ்வாறு உதவுவீர்கள் என்பதை ஒரு கதையாக செல்லுங்கள்<br>3. பெண்கல்வியே பெண்களின் முன்னேற்றத்திற்கான பாதை என்பதை ஒரு கதை வழியாக கூறுகங்கள | 1. நீங்கள் பள்ளி அளவிலான பாராளுமன்றத்தில் பங்கேற்கிறீர்கள் என்று கற்பனை செய்து பாருங்கள். சமூகத்தில் சமத்துவத்தை மேம்படுத்துவதில் ஒரு புதிய கொள்கை/ திட்டத்தை தொடங்க நீங்களும் உங்கள் குழுவும் எவ்வாறு முன்மொழிகிறீர்கள் என்பதற்கான கதையைச் சொல்லுங்கள்.<br>2.ஆணுக்கு நிகார பெண்கள் அடைந்து வளர்ச்சிப் பற்றி ஒரு கதையாக கூறுகங்கள்<br>3. நீங்கள் உங்கள் பள்ளியின் தலைமை மாணவர் என்று கற்பனை செய்யுங்கள். உங்கள் பள்ளியில் உங்கள் செயல்கள்/ திட்டங்கள் எவ்வாறு சமத்துவத்தை ஊக்குவித்தது என்பது பற்றிய கதையைச் சொல்லுங்கள். | மொத்த மதிப்பெணகள் –20<br>1.கதை உட்கூறு– 6 மதிப்பெண்கள் (கதாப்பாத்திரம், நிகழ்வு , நிகழ்விடம், பிரச்சனைகள் மற்றும் தீர்வுகள் )<br>1.ஆக்கத்திறன் மற்றும் சுய உருவாக்கம் –5 மதிப்பெணகள்<br>2.குரல் மற்றும் முகபாவம் –5 மதிப்பெண்கள்<br>3. காலவரையறை மற்றும் மேடையில் தெளிவுடன் வழங்குதல் –4 மதிப்பெண்கள் | 3 (ஒவ்வொரு பிரிவிலும் ஒரு வெற்றியாளர்) |

| பள்ளி அளவிலான - தமிழ் இலக்கிய மன்றப் போட்டிகள் 2025-26 | | | | | |
|---|---|---|---|---|---|
| **மையக் கருத்துக்கள் - சமத்துவம், அமைதி மற்றும் நம்பிக்கை** | | | | | |
| **போட்டிகள்** | **பிரிவு I (வகுப்பு 6 மற்றும் 7)** | **பிரிவு II (வகுப்பு 8)** | **பிரிவு III (வகுப்பு 9)** | **மதிப்பெண்களை வழங்கும் அளவுகோல்கள்** | **வெற்றியாளர்களின் எண்ணிக்கை** |
| 3. பேச்சு – (கால அளவு 3 நிமிடம்) | 1. பெரியோரை போற்றும் ஒன்றாய் உயர்வும்<br>2. சம வாய்ப்புகள் உருவாக்குதல்<br>3. கலை வளர்க்கும் தமிழ்நாடு. | 1.இணைவோம் உயர் வோம்<br>2. இளையோரின் ஆற்றல் சமூகத்தின் உயர்வு<br>3. இயற்கைப் பேரிடரில் ஒற்றுமை | 1. ஈகையில் இணைவோம்<br>2. போரும் அமைதியும்<br>3. நாடு போற்றும் அமைதி காத்த தலைவர் | மொத்த மதிப்பெண்கள் –20<br>1.கருத்து –6 மதிப்பெண் (கருத்து தொடர்பு, புரிதல், தெளிவான கருத்தோட்டம்)<br>2. மொழி நடை –4 மதிப்பெண் (சொல் பயன்பாடு, இலக்கணம், எழுத்து பிழையின்மை)<br>3. ஆக்கத்திறன் மற்றும் பகுப்பாய்வு திறன் – 4 மதிப்பெண்கள் (உதாரணங்களுக்கான ஆக்கத்திறன், வாழ்க்கை தொடர்பு, புதுமை கண்ணோட்டம்)<br>குரல் மற்றும் முகபாவம் –3 மதிப்பெண்கள்<br>4. காலவரைறை மற்றும் மேடையில் தெளிவுடன் வழங்குதல் –3 மதிப்பெண்கள் | 3 (ஒவ்வொரு பிரிவிலும் ஒரு வெற்றியாளர்) |

| பள்ளி அளவிலான - தமிழ் இலக்கிய மன்றப் போட்டிகள் 2025-26 | | | | | |
|---|---|---|---|---|---|
| **மையக் கருத்துக்கள் - சமத்துவம், அமைதி மற்றும் நம்பிக்கை** | | | | | |
| **போட்டிகள்** | **பிரிவு I (வகுப்பு 6 மற்றும் 7)** | **பிரிவு II (வகுப்பு 8)** | **பிரிவு III (வகுப்பு 9)** | **மதிப்பெண்களை வழங்கும் அளவுகோல்கள்** | **வெற்றியாளர்களின் எண்ணிக்கை** |
| 4. கவிதை எழுதுதல் – ( கால அளவு 45 நிமிடம்) | 1. நட்பே அழகு<br>2. ஒற்றுமை வலிமை<br>3.அனைவருக்கும் சமத்துவம் | 1.சமத்துவத்தை வளர்ப்போம்.<br>2. ஈதலும் இரக்கமும்<br>3. உழைப்பால் உயர்வோம் ! | 1.கற்றதும் பெற்றதும்<br>2.நீதியை நிலைநாட்டுவோம்<br>3. அமைதியே என் கனவு | கவிதை எழுதுதல் –20 மதிப்பெண்கள்<br>1,கருத்து மற்றும் செய்தி –5 மதிப்பெண் (கருத்துடன் தொடர்பு, கருத்து வெளிப்பாடு, வாசிக்கும் பொழுது கவர்ந்து இழுத்தல் )<br>2.கவிதை உட்கூறு –5 மதிப்பெண்கள் (எதுகை, மோனை, சொல் பயன்பாடு)<br>3. ஆக்கத்திறன் –5 மதிப்பெண்கள் (மொழி மற்றும் தனித்துவ பார்வை சார்ந்த ஆக்கமான பயன்பாடு )<br>4.கருத்தோட்டம் –5 மதிபெண்கள் (கையெழுத்து, காலவரையறை தெளிவு) | 3 (ஒவ்வொரு பிரிவிலும் ஒரு வெற்றியாளர்) |
| | | | | **மொத்தம்** | **12 வெற்றியாளர்கள்** |

| SCHOOL LEVEL - ENGLISH LITERARY CLUB COMPETITIONS 2025-26 | | | | | |
|---|---|---|---|---|---|
| **THEME - EQUALITY, PEACE & TRUST** | | | | | |
| **COMPETITION** | **CATEGORY I (CLASS 6 &7)** | **CATEGORY II (CLASS 8)** | **CATEGORY III (CLASS 9)** | **CRITERIA FOR AWARDING MARKS** | **NO. OF WINNERS** |
| 1. Essay writing English | 1. Unity in diversity<br>2. The value of friendship and trust<br>3. Path towards peace | 1. Gender Equality for nation's progress<br>2. Building Positive social relationships<br>3. Role of peace in nation's freedom | 1. Sustainable Development and Peace<br>2. Non-violence in Indian history<br>3. Role of Law in Promoting equality | Total Marks – 20<br>1. Content – 6 marks (relevance to the topic, depth of understanding, clear organization of content)<br>2.Language – 5 marks (Effective use of vocabulary, grammatical accuracy, spelling accuracy)<br>3.Creativity & Critical thinking – 5 marks (creative use of examples, real life connections, unique perspective)<br>4.Presentation and format - 4 marks (Neatness, handwriting, adherence to time-limit) | 3 (One winner in each category) |
| 2. Story telling English | 1. Tell a story about how you would help your friend who is in some trouble or a difficult situation.<br>2. Imagine you are the captain of a sports club. Tell a story on how you would promote equal participation of all students in sports. | 1. Tell a story about a special memory with your teacher that highlights the friendship and trust between you<br>2. Tell a story about how you would support your friend who is finding challenges in their studies, with your friendship and trust.<br>3. Tell a story that shows | 1. Imagine you and your friends are participating in the students' parliament. Tell a story of how you and your team propose a new policy or scheme towards promoting equality.<br>2. Tell a story about how women have achieved equality and progressed in life.<br>3. Imagine you are the | Total marks - 20<br>1.Elements of story - 6 marks (Character, events, setting, problem and solution)<br>2.Creativity and originality of the story -5 marks<br>3.Voice and Expression - 5 marks<br>4. Adherence to time limit and confidence on stage - 4 marks | 3 (One winner in each category) |

| SCHOOL LEVEL - ENGLISH LITERARY CLUB COMPETITIONS 2025-26 | | | | | |
|---|---|---|---|---|---|
| **THEME - EQUALITY, PEACE & TRUST** | | | | | |
| **COMPETITION** | **CATEGORY I (CLASS 6 &7)** | **CATEGORY II (CLASS 8)** | **CATEGORY III (CLASS 9)** | **CRITERIA FOR AWARDING MARKS** | **NO. OF WINNERS** |
| | 3. Imagine your friend is not attending school regularly. Tell a story on how you would support them to attend school regularly. | how educating girls paves the way for their empowerment and progress. | school captain of your school. Tell a story about how your actions or initiatives would promote equality in your school. | | |
| 3. Speech English | 1. Treating elders with respect<br>2. Equal opportunities for all<br>3. Celebrating cultural diversity in Tamilnadu | 1. Unity for progress<br>2. Role of youth in promoting peace in society<br>3. Unity in times of natural disasters | 1. Promoting a culture of kindness and respect<br>2. War and Peace<br>3. A leader who promoted peace and equality | Total Marks – 20<br>1.Content – 6 marks (relevance to the topic, depth of understanding, clear organization of content)<br>2.Language – 4 marks (Effective use of vocabulary, grammatical accuracy)<br>3.Creativity & Critical thinking – 4 marks (creative use of examples, real life connections, personal perspective)<br>4.Voice and Expression - 3 marks<br>5.Adherence to time limit and confidence on stage - 3 marks | 3 (One winner in each category) |

| SCHOOL LEVEL - ENGLISH LITERARY CLUB COMPETITIONS 2025-26 | | | | | |
|---|---|---|---|---|---|
| THEME - EQUALITY, PEACE & TRUST | | | | | |
| **COMPETITION** | **CATEGORY I (CLASS 6 &7)** | **CATEGORY II (CLASS 8)** | **CATEGORY III (CLASS 9)** | **CRITERIA FOR AWARDING MARKS** | **NO. OF WINNERS** |
| 4. Poetry writing English | 1. Friendship<br>2. Unity is strength<br>3. Equality for all | 1. Let's promote equality<br>2. Kindness matters<br>3. Together We Grow | 1. Care for elders<br>2. Rise up for Justice<br>3. Dream of peaceful world | Total Marks – 20<br>1.Theme and message - 5 marks (Relevance to theme, effective expression of ideas, ability to influence the reader)<br>2.Poetic elements - 5 marks ( Rhyme scheme, Effective use of language and vocabulary, Use of literary devices - metaphor, simile)<br>3.Creativity - 5 marks (creative use of language, unique perspective )<br>4.Presentation and format - 5 marks (Neatness, handwriting, adherence to time-limit) | 3 (One winner in each category) |
| | | | | **Total** | **12 winners** |

**இணைப்பு - II**

# School-level Literary Club Competition 2025-2026

## SCORING SHEET FOR JUDGES

| | |
|---|---|
| **Name of the school** | |
| **Name of the competition** | |
| **Category (Class)** | Category I (Class 6 & 7) / Category II (Class 8) / Category III (Class 9) |
| **Name of the judge** | |
| **Designation of the judge** | |

| SL NO. | Name of the student | EMIS No. | Marks awarded as per the criteria | | | | | Total marks awarded out of 20 |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | |
| | | | | | | | | |
| | | | | | | | | |
| | | | | | | | | |
| | | | | | | | | |
| | | | | | | | | |
| | | | | | | | | |
| | | | | | | | | |
| | | | | | | | | |
| | | | | | | | | |

**இணைப்பு - III**

## School-level Literary Club Competition 2025-2026

## CONSOLIDATED SCORING SHEET

| | |
|---|---|
| **Name of the school** | |
| **Name of the competition** | |
| **Category (Class)** | Category I (Class 6 & 7) / Category II (Class 8) / Category III (Class 9) |
| **Name of the judge** | Judge 1 : |
| | Judge 2 : |
| | Judge 3 : |

| SL NO. | Name of the student | EMIS No. | Marks awarded by each Judges | | | Total marks awarded out of 60 |
|---|---|---|---|---|---|---|
| | | | Judge 1 | Judge 2 | Judge 3 | |
| | | | | | | |
| | | | | | | |
| | | | | | | |
| | | | | | | |
| | | | | | | |
| | | | | | | |
| | | | | | | |
| | | | | | | |

**<u>இணைப்பு – IV - பள்ளி அளவிலான வினாடி வினா மன்றப் போட்டி நடத்துவதற்கான வழிமுறைகள்</u>**

பள்ளிஅளவில் ஒவ்வொரு பிரிவினருக்கும் தனித்தனியே {அதாவது பிரிவு -I (வகுப்பு 6 & 7 ), பிரிவு -II (வகுப்பு 8 ), பிரிவு -III (வகுப்பு 9 )} வினாடி வினா மன்ற போட்டிகளை கீழே அட்டவணையில் குறிப்பிடபட்டுள்ளவாறு ஒவ்வொரு குழுவிலும் இரண்டு மாணவர்களை கொண்டு மூன்று சுற்றுகளாக திட்டமிட்டு நடத்துதல் வேண்டும்.

| **சுற்றுகள்** | **பொருளடக்கம்** | **கேள்விகளின் எண்ணிக்கை** | **மதிப்பெண்கள்** |
|---|---|---|---|
| சுற்று 1 | சமத்துவம், அமைதி மற்றும் நம்பிக்கை ஆகிய மையகருத்திலாலான கேள்விகள் | 10 | 10 |
| சுற்று 2 | திருக்குறள், அறிவியல், சமூக அறிவியல், கணிதம், ஆங்கில இலக்கணம் (English grammar) | 10 | 10 |
| சுற்று 3 | தேன் சிட்டு இதழ், பொது அறிவு மற்றும் நடப்பு நிகழ்வுகள் (Current affairs) | 10 | 10 |

**இணைப்பு-V**

## School-level Quiz Club Competition 2025-2026

## SCORING SHEET

| | |
|---|---|
| **Name of the school** | |
| **Category (Class)** | Category I (Class 6 & 7) / Category II (Class 8) / Category III (Class 9) |
| **Name of the judge** | |

| SL NO. | Team | Name of the student | EMIS No. | Marks awarded in | | | Total marks awarded out of 30 |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | Round I (10 marks) | Round II (10 marks) | Round III (10 marks) | |
| 1 | Team 1 | | | | | | |
| | | | | | | | |
| 2 | Team 2 | | | | | | |
| | | | | | | | |
| 3 | Team 3 | | | | | | |
| | | | | | | | |
| 4 | Team 4 | | | | | | |
| | | | | | | | |
| 5 | Team 5 | | | | | | |
| | | | | | | | |

**இணைப்பு – VI**

பள்ளி அளவில் நடைபெறும் மன்ற செயல்பாடுகளுக்கான பதிவுகள் EMIS தளத்தில் Curricular & Co-curricular Activities தலைப்பின் கீழ் உள்ளீடு செய்தல் வேண்டும். இத்தலைப்பின் கீழ் ஒவ்வொரு மன்றங்களுக்கான பொறுப்பாசிரியர் நியமனம், மாணவ தூதுவர் மற்றும் போட்டிகள் குறித்த விவரங்களை உள்ளீடு செய்வதற்கான பிரிவுகள் தனித்தனியே அமைக்கப்பட்டுள்ளது.

Tab -1 (பிரிவு – 1)

பள்ளி அளவில் 03.07,2025 அன்று நடைப்பெற்ற மன்றங்களின் துவக்கவிழாவின் போது தேர்ந்தெடுக்கப்பட்ட ஒவ்வொரு மன்றங்களுக்குமான பொறுப்பாசிரியர்களின் விவரங்களை உள்ளீடு செய்தல் வேண்டும்.

Tab -2 (பிரிவு – 2)

பள்ளி அளவில் 03.07.2025 அன்று நடைப்பெற்ற மன்றங்களின் துவக்கவிழாவின் போது தேர்ந்தெடுக்கப்பட்ட ஒவ்வொரு மன்றங்களுக்குமான மாணவ தூதுவர்களின் விவரங்களை உள்ளீடு செய்தல் வேண்டும்.

Tab -3 (பிரிவு – 3)

இப்பிரிவின் கீழ் மன்ற போட்டிகள் (இலக்கிய மன்றம், வினாடிவினா மன்றம், சிறார் திரைப்பட மன்றம்) சார்ந்த விவரங்கள் அளிக்கப்பட்டுள்ளன. பள்ளி அளவில் ஒவ்வொரு மன்ற போட்டிகளிலும் பங்கேற்கும் மாணவர்களின் விவரங்கள் உள்ளீடு செய்யப்படுதல் வேண்டும். அதன் பின்னர் ஒவ்வொரு போட்டியிலும் வெற்றியாளர்கள் தேர்ந்தெடுக்கப்படுதல் வேண்டும்.

EMIS தளத்தில் ஒவ்வொரு மன்ற போட்டிகளில் சார்ந்த பிரிவில் (Category) பங்கேற்ற மாணவர்களின் விவரம் மற்றும் வெற்றியாளர்களின் விவரம் வரையறுக்கப்பட்டுள்ள கால அவகாசத்திற்குள் உள்ளீடு செய்யப்படுதல் வேண்டும்.